S.C. No: 34/2020
பெயர்: அனிதா
**அ.சா. 13**
24-06-2026
(5 ஆம் எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 4 ஆம் எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் 2, 6, 7 ஆஜரில்லை. 2, 6, 7 ஆம் எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு , அனுமதிக்கப்பட்டது.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.33**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு , 5 ஆம் எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை**

எனது கணவர் பெயர் சிவக்குமார் என்றால் சரிதான். எனது கணவர் சிவக்குமார் தான் இந்த வழக்கில் அ .சா.10 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் ஏற்கனவே கூறியுள்ள சங்கதிகள் அனைத்துமே போலிசார் எனக்கு சொல்லிக்கொடுத்ததன் பேரிலேயே நான் சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.35**

Sd (xxxx)
Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.
/True Copy/
Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

S.C. No: 34/2020

பெயர்: அருள்செல்வன்

**அ.சா. 11**

24-06-2026

(5 ஆம் எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 4 ஆம் எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் 2, 6, 7 ஆஜரில்லை. 2, 6, 7 ஆம் எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு , அனுமதிக்கப்பட்டது.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.28**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு , 5 ஆம் எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்பவத்தின் போது நான் காவல் துறையில் தான் பணிசெய்து வந்தேன் என்றால் சரிதான். சம்பவத்தின் போது பந்தநல்லூர் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன் . நான் காவல் துறையில் பணியில் இருந்ததால் நாச்சியார்கோயில் காவல் நிலைய ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் முதல் விசாரணையில் தவறாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.32**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

S.C. No: 34/2020

பெயர்: சிவக்குமார்

**அ.சா. 10**

24-06-2026

(5 ஆம் எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 4 ஆம் எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் 2, 6, 7 ஆஜரில்லை. 2, 6, 7 ஆம் எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு , அனுமதிக்கப்பட்டது.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.25**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு , 5 ஆம் எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் எத்தனை ஆவணங்களில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் ஒரு ஆவணத்தில் மட்டும் கையொப்பம் செய்துள்ளேன். அந்த கையொப்பம் செய்தது நாச்சியார்கோவில் காவல் நிலையத்தில் தான் என்றால் சரியல்ல . புளியம்பேட்டை, சத்தியமூர்த்தி நகரில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் . முதல் விசாரணையில் நான் கையெழுத்து போட்டதாக கூறிய ஆவணத்தில் , காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் முதல் விசாரணையில் பொய்யாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.27**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

S.C. No: 34/2020
பெயர்: தனசேகரன்
**அ.சா. 9**
24-06-2026
(5 ஆம் எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 4 ஆம் எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் 2, 6, 7 ஆஜரில்லை. 2, 6, 7 ஆம் எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு , அனுமதிக்கப்பட்டது.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.19**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு , 5 ஆம் எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை**

நான் VAO வாக தற்போது எங்கு பணிபுரிந்து வருகிறேன் என்றால் தூத்தக்குடி மாவட்டம், திருசெந்தூர் வட்டம், காயாமொழி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் எனது சர்வீசில் எத்தனை குற்ற வழக்குகளில் சாட்சியமளித்துள்ளேன் என்றால் இந்த வழக்குடன் சேர்த்து இரண்டு வழக்குகளில் நான் சாட்சியாக இருந்துள்ளேன். இந்த வழக்கில் மட்டுமே விசாரிக்கப்பட்டுள்ளேன். இந்த வழக்கில் நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளனவா என்றால் உள்ளன . நான் தற்போது முதல் விசாரணையில் உள்ள சங்கதிகளை மீண்டும் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. ஞாபகம் வைத்துக்கொண்டதன் அடிப்படையிலேயே சாட்சியமளிக்க வந்துள்ளேன். நான் முதல் விசாரணையில் கூறியது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரிலேயே முதல் விசாரணையில் அவ்வாறு சாட்சியமளித்தேன் என்றால் தவறு.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.23**

Sd (xxxx)
Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

S.C. No: 34/2020
பெயர்: மகாலிங்கம்
**அ.சா. 8**
24-06-2026
(5 ஆம் எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 4 ஆம் எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் 2, 6, 7 ஆஜரில்லை. 2, 6, 7 ஆம் எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு , அனுமதிக்கப்பட்டது.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.15**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு , 5 ஆம் எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் வழக்கு சம்மந்தமாக நான் எத்தனை கையொப்பம் போட்டேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை . நீதிமன்றத்தில் என்ன சாட்சியமளிக்க வேண்டும் என்ற விவரத்தை போலிசார் என்னிடம் சொன்னார்கள் என்றால் இல்லை . நான் கையெழுத்து போட்ட பேப்பர்களை யார் எழுதினார்கள் என்றால் போலிசார் தான் எழுதினார்கள் . எந்த போலிஸ், என்ன நிலையில் உள்ள போலிஸ் அதை தயார் செய்தார் என்ற விவரம் எனக்கு ஏதும் தெரியாது என்றால் சரிதான் . நான் கையெழுத்து போட்ட பேப்பர்கள் எல்லாம் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் இல்லை . நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்கள் எல்லாம் போலிசார் சொல்லிக்கொடுத்து தான் சொன்னேன் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.17**

Sd (xxxx)
Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

S.C. No: 34/2020
பெயர்: ஆரோக்கியசாமி
**அ.சா. 4**
24-06-2026
(5 ஆம் எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 4 ஆம் எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் 2, 6, 7 ஆஜரில்லை. 2, 6, 7 ஆம் எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு , அனுமதிக்கப்பட்டது.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.00**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு , 5 ஆம் எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எப்பொழுது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்தன்று விசாரித்தது தான் . வேறு எப்பவும் என்னை விசாரிக்கவில்லை . VAO முருகேசனை எனக்கு ஏற்கனவே தெரியும் என்றால் சரிதான் . நான் ரேசன் கடையில் வேலை செய்த போது, அவரும் வேலை செய்தார் என்பதால் , VAO வை முன்னரே தெரியும். என் மகன் பெயரில் கும்பகோணம் காவல் நிலையத்தில் ஒரு கொலை முயற்சி வழக்கு இருந்ததா என்றால் இல்லை . அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. கோவனூர் பன்னீர் செல்வம் என்பவரை என் மகன் கத்தியால் குத்தியதாக நாச்சியார்கோயில் காவல் நிலையத்தில் இன்னொரு வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் என்னை கோவனூர் பன்னீர் செல்வம் தரங்கெட்ட கொச்சையனா வார்த்தைகளால் திட்டவும் தான் எனது மகனுக்கு கோபம் வந்தது , அதனால் செய்துவிட்டான். திருநரையூர் பாஸ்கர் என்பவரை கொலை செய்துவிட்டதாக எனது மகன் பெயரில் மற்றொரு வழக்கு நாச்சியார்கோவில் காவல் நிலையத்தில் நிலுவையில் இருந்ததா என்றால் அது போன்று சம்பவம் குறித்து என்னை யாரும் விசாரிக்கவில்லை . அப்படி ஒரு வழக்கும் இல்லை . என் மகனுக்கு செங்கிபட்டி காவல் நிலையத்திலும் எதிராக ஒரு கொலை வழக்கு இருந்தது குறித்து என்னை போலிசார் விசாரித்தார்களா என்றால் என்னை ஏதும்

விசாரிக்கவில்லை. அதிகாலை 2 மணிக்கு என்னை போலிசார் வந்து மிரட்டி அழைத்து சென்று தஞ்சாவூர் காவல் நிலையத்தில் உட்கார வைத்துவிட்டார்கள். எதற்காக என்னை அங்கு வைத்திருக்கிறீர்கள் என்று கேட்கவும் அவர்களுக்கு பதில் ஏதும் சொல்ல முடியவில்லை . முதல் விசாரணையின் போது நான் கூறிய சங்கதிகளை என்னை சொல்லச்சொல்லி போலிசார் அறிவுறுத்தியதன் பேரில் தான் நான் அன்று சாட்சியமளித்தேன் என்றால் சரியல்ல . போலிசார் என்னிடம் பேசவேயில்லை. எனது முதல் விசாரணையில், சூரியபிரகாஷ் தன்னை கொலை செய்ய முயற்சி செய்ததாக எனது மகன் என்னிடம் கூறியதாக எனது முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. போலிசாரிடமும் அது குறித்து நான் சொன்னேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை . நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் எல்லாம் போலிசார் எனக்கு சொல்லிக்கொடுத்து தான் சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.12**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.